**தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு - 209 தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மறறும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாரள் நாயகத்தின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய

உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**(அ)** மூலதன செலவீனம்
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த கணினி உபகரணங்களின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 6,171,985 ஆக காணப்பட்டது. எனினும், 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 6,038,585 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் வித்தியாசம் ரூபா 133,400 ஆக காணப்பட்டதுடன், குறித்த பெறுமதி 2021 இன் நிதி அல்லாச் சொத்துக்கள் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>இறுதி மீதியாக முன்கொண்டு செல்லப்பட்டிராத விவசாய மற்றும் பால் பண்ணை உபகரணங்கள் (6112216 ஆம் இலக்கம்) கீழ் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | தவறுகள் சீர் செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆரம்ப மீதியாக ரூபா 133,400 ஆன தொகை **ACA - 6** மாதிரியினுள் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான அலுவலக கட்டிடம் மறுசீரமைக்கும் பணி 2019 சனவரி 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 யூலை 01 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒப்பந்தமாவதுடன், அந் நிர்மாணிப்பு பணிகள் 2023 ஏப்ரல் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் அனைத்து வரிகளையும் உள்ளடக்கி ரூபா 992,230,065 ஆக காணப்பட்டது. மேற்படி மறுசீரமைப்பு பணியானது வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனிக்கும், அதன் ஆவோசனை பணிகள் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்படி மதிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 435,747,176 ஆன தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையும், மேலும் ரூபா 8,205,900 ஆன தொகை பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காக செலுத்த வேண்டியமையும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கிரயம் ரூபா 443,953,076 ஆன மொத்த பெறுமதி கட்டிடத்தின் பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், மேற்படி பெறுமதியானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றினுள் நிதி அல்லாச் சொத்துக்கள் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமதியினுள் | தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்தின் பிரதான கட்டிடம் மறுசீரமைக்கப்பட்டு மத்திய வளிப்பதனாக்கி மற்றும் உயரிய பாதுகாப்பு முறைமையொன்று தாபிப்பதற்குரிய மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அந் நடவடிக்கைகள் இதுவரையில் நிறைவு செய்யப்பட்டிராததுடன், குறித்த செலவினமானது, 209-02-02-2001 (கட்டிடங்கள் மறுசீரமைத்தல்) செலவின விடயத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிராமையினால், அச் செலவீனம் 209-02-02-2101 செலவின விடயத்தின் கீழ் நிர்மாணிப்பு நடவடிக்கையாக அன்று, 209-02-02-2001 செலவின விடயத்தின் கீழ் மறுசீரமைப்பு நடவடிக்கையாக கணக்கிடப்படும். அதன் போது மேற்கொண்ட பணிகளின் பெறுமதி, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கீழ் அறிக்கையிடப்படாததுடன், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் ஒட்டுமொத்த கட்டிடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மூலதனமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.<br><br>அவ்வாறே, தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்தின் புதிய கட்டிடத்தின் (B கட்டிடம்) பெறுமதியினை மதிப்பிடுவதற்கு விலைமதிப்பு திணைக்களத்திடம் | நிர்மாணிப்பிற்காக ஏற்கப்பட்ட செலவீனம் நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் அல்லது நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் (ACA – 6) குறிப்பின் ஊடாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்படி பெறுமதியான ரூபா 443,953,076 ஆன தொகை **ACA 6** இற்கு பதிலாக சமர்ப்பிக்கின்ற புதிய **CIGAS** வலைத்தளத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட நிதி அல்லாச் சொத்துக்கள் அறிக்கையில் கட்டிடங்கள்/9151 இலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2012 ஆம் ஆண்டினுள் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட தற்போது அலுவலக பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற புதிய கட்டிடத்தின் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கணிக்கப்பட்டு அதன் பெறுமதி நிதி கூற்றினுள் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடிதமொன்றின் ஊடாக கோரப்பட்டுள்ளதுடன், குறித்த நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2 செலவின விடயங்களுக்குரிய 100 சதவீத நிதியேற்பாட்டில் ரூபா 850,000 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான 10 செலவின விடயங்களுக்குரிய சேமிப்புக்கள் மிகை மதிப்பீட்டினாலேயே ஏற்பட்டதென ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. | மதிப்பீடு தயாரிக்கும் போது உரிய கவனத்துடன் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் பொருத்தமான முறையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மீளாய்வு செய்யப்பட்டு உரிய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 500 டெராபைட் திறனை உடைய டிஜிடல் காப்பகத்தினை தாபிக்கும் செயற்திட்ட முன்மொழிவிற்கு 2021 ஏப்ரல் 05 திகதிய அமப/21/0511/305/010-1 ஆம் இலக்க அமைச்சரவை | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 இன் 03 (iii) மற்றும் (iv) பிரிவுகள் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நேரிட்டது. | டிஜிடல் காப்பகத்தினை தயாரிக்கும் செயற்திட்டத்தின் பணிகள் விரைவில் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

தீர்மானத்தின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 05 ஆண்டுகளைக் கொண்ட செயற்திட்ட காலத்திற்கு ரூபா 120,208,320 ஆன செயற்திட்ட கிரயமொன்று மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் முதல் கட்டத்திற்காக தகவல் தொழிநுட்பம், உட்கட்டமைப்பு வசதிகள், மென்பொருள், பதவியணியின் அறிக்கை மேம்பாடு, ஆலோசனை சேவைகள் மற்றும் நிச்சயமற்ற செலவீனங்களுக்காக வரி உள்ளடங்கலாக ரூபா 92,906,820 ஆன தொகையும், 2023 தொடக்கம் 2025 காலப்பகுதி வரை சேவைகள் மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 27,301,500 என முழு கியரம் மதிப்பிடப்பட்டிருந்தது.

மேற்படி செயற்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்கான தேறிய நிதியேற்பாடு ரூபா 7,500,000 ஆக காணப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகார்ம் செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் பூஜ்ஜியமாகும். செயற்திட்டத்தின் முதலாம் கட்ட பணிகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மேற்படி செயற்திட்டத்திற்குரிய பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்த நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு முடியாது போனமையின் காரணத்தினால் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 80 மில்லியன் நிதியேற்பாடு பாதீட்டின் ஊடாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், எனது DNA/15/AROI/1/1 ஆம் இலக்க மற்றும் 2021.06.28 திகதிய கடிதத்திற்கு பதிலாக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் CA/NH/15/02/01/04 ஆம் இலக்க மற்றும் 2023.02.15 திகதிய கடிதத்தின் ஊடாக பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடப்படுவதற்குரிய மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அப் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தின் இனக்கப்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொளளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் CCTV கெமரா அமைப்பினை பொருத்தும் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்றத்தின் பிரகாரம் தொழிநுட்ப மீளாய்வு குழுவினால் விபரக்கூறிப்பு தயாரிக்கப்பட்டிராமை குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றமாக தொழிநுட்ப மீளாய்வு குழுவினால் விபரக்குறிப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு ஆண்டொன்றிற்கு பின்னரும் குறித்த செயற்திட்டத்திற்காக பெறுகைகள் ஆரம்பிக்கப்பட்டிராமை உள்ளக முகாமைத்துவ பலவீனமொன்றாக அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் CCTV பராமரிப்பு மற்றும் சேவைகள் ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு விலைகூறுகள் அழைக்கப்பட்டுள்ளது. எனினும், CCTV பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீடொன்று தயாரிப்பதற்கு தொழிநுட்ப மீளாய்வு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், 03/2022 அரச செலவீன கட்டுப்பாடு சுற்றிறிக்கையின் ஆலோசனையின் அடிப்படையில் செலவீனத்தினை குறைப்பதற்கு நேர்ந்தது. எவ்வாறெனினும், இந்த ஆண்டில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இந்த பணிகள் நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கின்றேன். | பொருட்களின் விலைகள் விரைவாக மாற்றத்திற்கு உட்படுகின்றமையினால் பெறுகை நடவடிக்கைகள் விரைவில் நிறைவு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் கட்டிடங்கள் விரிவாக்கலின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடம் 2012 நவம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் VS Information System (Pvt) Ltd (VSIS) நிறுவனத்தினால் கட்டிடத்தின் CCTV அமைப்பு தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் பெறுகை வழிக்காட்டி இல 3.2 இன் பிரகாரம் VSIS நிறுவனம் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமொன்றாகாததுடன், உத்தரவாதக் காலம் நிறைவடைந்த பின்னர் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளுக்காக | புதிய கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ள அனைத்து அமைப்புக்களையும் தாபித்தல் மற்றும் அதன் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் கட்டிடத்தினை நிர்மாணித்த ஒப்பந்தக்காரரான CECB நிறுவனத்தினால் ஆவதுடன் VISIS நிறுவனம் குறித்த அமைப்பினை தாபித்துள்ளது. பொருத்தப்பட்டதன் பின்னர் உத்தரவாதக் காலம் நிறைவடைந்த பின்னர் சேவை ஒப்பந்தமொன்று காணப்படாததுடன் சேவை ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கான வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக 05 | CCTV அமைப்பின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திணைக்களம் மற்றும் VSIS நிறுவனத்துடன் சேவை ஒப்பந்தமொன்று காணப்படாமையின் காரணத்தினால் CCTV அமைப்பின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் முறையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களிலிருந்து விலைக்கூறுகள் அழைக்கப்பட்டுள்ளன. | |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் புதிய கட்டிடத்தில் 23 இடங்களில் CCTV கெமரா பொருத்தப்பட்டிருந்த போதிலும், 2023 ஏப்ரல் கணக்காய்வு திகதியாகையில் செயல்பாட்டு நிலையில் 09 கெமராக்கள் மட்டும் காணப்பட்டன. இந்த CCTV அமைப்பு பொருத்தப்பட்டு 10 ஆண்டுகளை கடந்திருந்த போதிலும், அதன் குறைப்பாடுகள் இனங்காணப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையின் காரணத்தினால் தேசிய பெறுமதியுடைய ஆவணங்களுக்கு போதுமான பாதுகாப்பொன்று வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | CCTV கெமரா அமைப்பினை பழுதுபார்க்கப்பட வேண்டியதுடன் இந்த ஆண்டினுள் குறித்த பணியினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | தேசிய பெறுமதியுடைய சுவடிகளுக்கு திணைக்களத்தினால் போதுமான பாதுகாப்பினை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | காணி ஆனையாளர் நாயக திணைக்களத்தின் 4/14/5994 ஆம் இலக்க மற்றும் 2022 நவம்பர் 17 திகதிய கடிதத்தின் ஊடாக தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணியை பயன்படுத்துவதற்கு திணைக்களத்திற்கு விடுவிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் வரையிலும் குறித்த கையகப்படுத்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி, திணைக்களத்திற்கு விடுவித்தலானது காணி ஆனையாளர் நாயகம் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், உரிமையினை கையளிப்பதற்குரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை திபிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. கையேற்கும் நடவடிக்கைகளுக்கு உத்தியோகத்தொருவரின் பெயர் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. | பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் பிரதான பிரிவொன்றாக நடாத்திச் செல்கின்ற சுவடிக் காப்பு பிரிவில் சுவடிக் காப்பாளர் பதவிகள் 27 அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், தற்போது பிரிவில் 02 ஊழியர்கள் மட்டும் பணியாற்றி வருகின்றனர். இந்த நிலை பிரிவினுள் தொடர்ந்தும் நிலவி வருகின்றமையினால் சுவடிக் காப்பு நடவடிக்கைகளின் போது இவ் ஊழியர் பற்றாக்குறையினால் வெவ்வேறு பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்க நேரிடுவதுடன், பிரிவினுள் நாளாந்த கடமைகள் மற்றும் ஒட்டுமொத்த செயலாற்றலில் மெதுவான நிலை சித்தரிக்கப்பட்டது. இவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள ஆவணங்கள் உரிய காலத்தில் பாதுகாப்பு செயன்முறைக்கு உட்படுத்தாமையினால் இந்த ஆவணங்கள் பௌதீக ரீதியில் நாளுக்கு நாள் சிதைவடைந்து செல்வதுடன், அரச சுவடிகள் முறையே முகாமைத்துவம் செய்யும் தேவைக்கும் இது பாதகமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய சுடிவக் காப்புத் திணைக்களம் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், **03/2022** ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் புதிய இணைத்தல்கள் இடைநிறுத்தப்பட்டதன் காரணத்தினால் அந் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதற்கு நேரிட்டது. எவ்வாறெனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மற்றும் அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஊழியர் பற்றாக்குறையினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) சுவடிக்காப்பிற்காக நெதர்லாந்து அன்பளிப்பின் கீழ் திணைக்களத்திற்கு பெறப்பட்டிருந்த சுவடிக்காப்பு இயந்திரங்கள் 02 மற்றும் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டில் ரூபா 5,040,000 ஆன (வற் உள்ளடங்கலாக) பெறுமதிக்கு கொள்வனவு | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செய்யப்பட்டிருந்த இயந்திரம் உள்ளடங்கலாக 03 இயந்திரங்கள் 02 ஆண்டுகளாக போதுமான ஊழியர்கள் காணப்படாமையினால் விளைவற்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு காப்பு இயந்திரங்கள் காப்பு நடவடிக்கைகளுக்காக பௌதீகமாக பயன்படுத்தாமையினால் அவ் இயந்திரங்களின் செயல்பாட்டிற்கு பாதகமாக தாக்கமளித்திருந்ததுடன், பாரம்பரிய காப்பு நுட்பத்தின் கீழ் செலவிடப்படும் நேரத்தினை குறைத்துக் கொள்ளும் திறனும் குறைகின்றமை அவதானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (இ) தேசிய அரசுப் பேரவையின் 1973 இன் 48 ஆம் இலக்க சுவடிக்காப்பு சட்டத்தின் 179 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் குறிக்கோள்கள் மற்றும் பணிகள் பிரகாரம் இந் நாட்டில் வெளியிடப்படும் வெளியீடுகளின் அனைத்து சட்டரீதியான வைப்புக்களினதும் காப்பக ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணியின் போது திணைக்களத்தினால் அச்சு பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்படுகின்றது. 2023 சனவரி 04 கணக்காய்வு திகதி வரையிலும் அச்சக பரிசோதகராக ஒரு உத்தியோகத்தர் மட்டும் கடமையில் பணிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறு நாடு முழுதும் மேற்கொள்ளப்படுகின்ற அச்சக பரீட்சிப்புக்களுக்கு ஒரு உத்தியோக்தர் போதுமானதல்ல என அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த காரணத்தினால் 02 ஆண்டுகள் தொடக்கம் திணைக்களத்தினால் அச்சக | அச்சக பரிசோதனை மேற்கொண்ட பின்னர் மாதாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்காத அச்சக நிபுணர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு குறித்த பொறுப்பு பணிக்கப்பட்டுள்ளது அடைவு உதவியார்/ அடைவு உத்தியோகத்தர் பதவிகளுக்காகும். அப் பதவிகள் 09 அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது பணியாற்றுவது ஒரு அடைவு உதவியாளர் மட்டுமாகும். அவ் உத்தியோகத்தர் தற்போது வெளியீடுகளுக்காக விடய வகைப்படுத்தலினை மட்டும் மேற்கொள்கின்றார். எவ்வாறெனினும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவர் இணைக்கப்பட்டு இந்த பிரிவின் பத்திரிக்கைகள் இணைக்கும் நடவடிக்கைகளும், ரசீதுகளை சமர்ப்பித்தல், வெளியீடுகளை கணினிமயப்படுத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை போதுமானதாக இல்லை. எதிர்காலத்தில் | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிராததுடன், 10 ஆண்டுகளாக சட்டத்திற்கு முரண்பட்ட சந்தர்ப்பங்களுக்காக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அச்சக பரிசோதகர்கள் மற்றும் அடைப்பு உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் நிரப்புவதன் ஊடாக இந்த நிலையை குறைத்துக் கொள்ள முடியும். | |
| (ஈ) தேசிய அரசுப் பேரவையின் 1976 இன் 66 ஆம் இலக்க அச்சீட்டாளர்களின் மற்றும் வெளியீட்டாளர்கள் தொடர்பான (திருத்த) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையினுள் அச்சிடப்படுகின்ற பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் புத்தகங்களின் 05 பிரதிகள் தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்டிராத அச்சகங்கள் மற்றும் வெளியீட்டாளர்களினால் அச்சிடப்படுகின்ற பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் புத்தகங்களின் பிரதிகள் முறையே தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் அவர்களின் வெளியீடுகள் மற்றும் தகவல் பத்திரிக்கைகளை உரிய வண்ணம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்களின் போது நிகழக்கூடிய ஆபத்தினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 1976 இன் ஆம் இலக்க அச்சீட்டாளர்களின் மற்றும் வெளியீட்டாளர்கள் தொடர்பான (திருத்த) சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்திற்கு 09 பிரதான காப்பகங்கள் காணப்படுவதுடன், அதில் 02 காப்பகங்களான **DNA 07** இரகசிய சுவடிப் பிரிவு மற்றும் **DNA**/19/**A/2** காப்பகம் 2022 மார்ச் 04 கணக்காய்வு திகதி வரையில் 10 மாதக் காலமாக மூடப்பட்டிருச்தமை அவதானிக்கப்பட்டது. இரகசிய பிரிவிற்கு சொந்தமான புதிய மற்றும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். பழைய கட்டிடத்தின் புதிதாக்கல் நடவடிக்கைகளின் காரணத்தினால் மின்சாரத்தினை தடை செய்தல் மற்றும் வளிபதனாக்கி அமைப்புக்கள் செயற்படாமை முன்னர் இருந்தே தொடர்ந்து | காப்பகங்களில் ஏற்படக் கூடிய சிக்கல்களை தீர்த்துக் கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பழைய கட்டிடத்தின் இரகசிய அறைகளில் வைக்கப்பட்டுள்ள சுவடி பிரிவுகள் 200 இற்கு அதிகமாவதுடன், **DNA**/19/**A/2** காப்பகத்தினுள் 15 சுவடி பிரிவுகள் வைக்கப்பட்டிருந்தது. குறித்த 2 காப்பகங்களினுள் இரகசிய சுவடிகள் மற்றும் டச்சு சுவடிகள் காணப்பட்டன. மூடப்பட்டிருந்த காப்பகத்தினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுன்ன சுவடிகளை பயனர்களுக்கு பெற்றுக் கொடுத்தல், பிரதிகளை வெளியிடுதல், சட்ட நடவடிக்கைகள் அல்லது ஏனைய அரசு நிறுவனங்களுக்கு தகவல்களை பெற்றுக் கொடுத்தல் உள்ளடங்கலாக தேவைபாட்டின் அடிப்படையில் பல சந்தர்ப்பங்களில் சீல் வைக்கப்பட்டிருந்த காப்பகங்கள் திறக்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஒரு ஆண்டு காலமாக காப்பகங்கள் மூடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அதில் வைக்கப்பட்டுள்ள இரகசிய மற்றும் டச்சு சுவடிகளின் நிலைத்திருத்தன்மைக்குரிய வெப்பநிலை, ஈரப்பதன் மற்றும் பிற இரசாயன மற்றும் சுற்றாடல் காரணிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சிக்கலான நிலையொன்று ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | காணப்படுகின்ற நிலைமையாவதுடன், புதிய கட்டிடத்தின் மத்திய வளிப்பதனாக்கி அமைப்பொன்று செயற்படுகின்றமையினால் 2022 ஆம் ஆண்டில் கடமைக்கு வருகை தருதலினை மட்டுப்படுத்தலின் ஊடாக காப்பகங்களில் உகந்த சுற்று சூழலினை பேணிச் செல்லுதலில் பாரிய தாக்கமொன்று ஏற்படவில்லை. இந்த காலப்பகுதியினுள் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டும் குறித்த காப்பகங்களுக்குள் பிரவேசிப்பதற்கு வசதியளிக்கப்பட்டமையினால் சுவடிகளின் பாதுக்காப்பிற்காக நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற தூய்மைப்படுத்தல்கள், காப்பக பரிசோதனை, ஈரப்பதனை கட்டுப்படுத்தும் இயந்திர பரீட்சிப்பு போன்ற பணிகள் இந்த காலப்பகுதியினுள் உரிய வண்ணம் நிகழவில்லை. நிகழ்காலத்தில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆந் திகதி மற்றும் **DMA/01-2019** ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 5.3 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டமானது காலாண்டிற்கு ஒரு தடவை என குறைந்தபட்சமாக 04 கூட்டங்கள் நடாத்தப்பட்ட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் | 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி 15 ஆந் திகதி நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது 2022 இன் இறுதி காலாண்டிற்குரிய விடயங்களும் கலந்துரையாடப்பட்டது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

எந்தவொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் **DMS/1135/VOL – I** ஆம் இலக்க மற்றும் 2016 செப்தெம்பர் 15 திகதிய மற்றும் மேற்படி இலக்கமுடைய மற்றும் 2017 பெப்ரவரி 08 ஆந் திகதிய மற்றும் மேற்படி இலக்கமுடைய மற்றும் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய மற்றும் மேற்படி இலக்கமுடைய மற்றும் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதிய கடிதங்கள் ஊடாக தேசிய சுவடிக் காப்பு திணைக்களம் மீள்கட்டமைக்கப்பட்ட பின்னர் திணைக்களத்தின் பதவியணி 286 ஆக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதில் கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடமையில் இருந்த பதவியணி 133 ஆக காணப்பட்டதுடன், அது ஒட்டுமொத்த பதவியணியில் 47 சதவீதமாகும். மேலும், அத்திகதியில் உள்ளவாறு வெற்றிடங்கள் 153 ஆக காணப்பட்டதுடன், அது ஒட்டுமொத்த ஊழியர் எண்ணிக்கையில் 53 சதவீதமாகும். இவ்வாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஊழிய வெற்றிடங்களை பேணிச் செல்கின்றமை ஊடாக திணைக்களத்தினை தொடர்ந்து நடாத்திச் செல்லுதல் மற்றும் ஒட்டுமொத்த செயலாற்றலினை அடைவதற்குள்ள திறன் குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தேசிய சுடிவக் காப்புத் திணைக்களம் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், **03/2022** ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் புதிய இணைத்தல்கள் இடைநிறுத்தப்பட்டதன் காரணத்தினால் அந் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதற்கு நேரிட்டது. எவ்வாறெனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மற்றும் அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஊழிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திக் சிரேஷ்ட மட்டத்தின் பதவிகளில் 50 சதவீதமும், இரண்டாம் நிலை பதவிகளில் 75 சதவீதமும் மூன்றாம் நிலை பதவிகளில் 68 சதவீதமுமாக வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், இவ்வாறான தொழில்சார் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்தே தொடர்ந்தும் வருகின்றமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறான திணைக்களத்திற்குரிய தொழில்சார் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினாலும் தற்போதுள்ள தொழில்சார் நுட்பமுடைய உத்தியோகத்தர்கள் ஓய்வடைந்த பின்னர் திணைக்களத்திற்குரிய பணிகள் நிறைவேற்றுவதற்கு அறிவுத் திறன் கொண்ட பின்வரிசையினர் உருவாகாமையினாலும் சுவடி முகாமைத்துவத்திற்கு மற்றும் மிகை சுவடி முகாமைத்துவத்திற்கு தாக்கம் ஏற்படக் கூடியமை அவதானிக்கப்பட்டது. | தேசிய சுடிவக் காப்புத் திணைக்களம் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், **03/2022** ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் புதிய இணைத்தல்கள் இடைநிறுத்தப்பட்டதன் காரணத்தினால் அந் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதற்கு நேரிட்டது. எவ்வாறெனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மற்றும் அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஊழிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |